**O.S.No.158/2020**

**Date: 13.06.2025**

**வா.சா.1 P N முத்து**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நிரந்தரமாக கேரளாவில் தங்கியுள்ளேன். மேற்படி கேரளாவில் எர்ணாகுளம் மாவட்டத்தில் தங்கியுள்ளேன். மேற்படி எர்ணாகுளத்தில் குண்ணத்துநாடு வட்டம் மாணிக்கத்து வீடு, கூவப்படி பஞ்சாயத்து , கூவப்படி ஆகும். 2ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது மனைவி என்று குறிப்பிட்டு பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தமிழ்படிக்க தெரியும். எழுத தெரியாது. மேற்கண்ட விலாசத்தில் தான் எனது மனைவி குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை. வழக்கு தாக்கல்செய்த சமயம் எனது மனைவிக்கு மேற்கண்ட விலாசத்தை கூறி தான் வழக்கு தாக்கல்செய்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயம் நானும் எனது மனைவியும் ஒன்றாக தான் இருந்தோம். எதற்காக இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாமல் தாவா சொத்தையும் கம்பெனியையும்விற்றுவிட்டார்கள். கம்பெனி பெயர்கள் என்ன என்றால் மில்கிரவுண் இன்சினியரிங் மற்றும் ஸ்ரீகிருஷ்ணா இன்சினியரிங் ஆகும். ஸ்ரீகிருஷ்ணா இன்சினியரிங்க் கம்பெனி நடத்தி வருவதற்கு எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஸ்ரீகிருஷ்ணா இன்சினியரிங்க் கம்பெனி தற்போது தாவா இடத்தில் நடத்திவரவில்லை என்றால் சரியல்ல. தற்போது ஸ்ரீகிருஷ்ணா இன்சினியரிங்க் கம்பெனி நடத்திவருவதற்கான ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலும். எனது கைவசம் உள்ளது. ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து தீர்வை ரசீதுகளை 1ம் பிரதிவாதி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மி்ன் இணைப்பு 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 2020 ஜீன் மாதம் வரை நான் மின் இணைப்புக்கான பணம் செலுத்தி வந்தேன். 2020 ஜீன் மாதத்திற்கு பிறகு நானோ எனது மனைவியோ மின் இணைப்பு மற்றும் தீர்வை ரசீதுகளை செலுத்தவில்லை என்றால் சரிதான்.

2020 க்கு பிறகு நானும் எனது மனைவியும் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்து வருவதாக எழுத்து பூர்வமான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. கைவசம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை ஆனால் என்னால் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்ய இயலும். தற்போது எனது மனைவியுடன் நான் நல்ல முறையில் பேசிக்கொள்வேன் என்றால் சரியல்ல. சொத்தை விற்பனை செய்த பிறகு மனைவியுடன் சண்டை வந்து அவருடன் நான் பேசிக்கொள்வதில்லை. தாவாசொத்தை 31.01.2007 ல் பி.ஆர் கணேசன் என்பவர் மருதையா என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 22.12.2008 ல் பி.ஆர்.கணேசன் என்பவரிம் இருந்து 2 ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மனைவி பெயரில் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டது என்பதுகுறித்து எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். எனது மனைவி பெயருக்கு தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வழக்கு சொத்தில் கட்டுமானம் கட்டுவதற்கு என்னால் பஞ்சாயத்தில் பெறப்பட்ட கட்டிட வரைபட அனுமதி என்றால் சரிதான். மேற்படி கட்டிட வரைபட அனுமதி ஆவணம் **பி.வா.சாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 2 ம் பிரதிவாதியின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.1 னின் அடிப்படையில் தான் தாவா சொத்திற்கான வரி விதிப்பும் எனது மனைவி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 யை நான் பெற்றதற்கு எழுத்து பூர்வமான ஆதாரம் கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–1 ஆவணம் எனது மனைவியால் வாங்கப்பட்டது என்றாலும், வழக்கிற்காக நான் தான் வாங்கினேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 31.01.2007, 22.12.2008 கிரைய ஆவணங்களின் அசல் ஆவணங்கள் எனது கைவசம் கிடையாது என்றால் சரிதான். மேற்படி 2 அசல் ஆவணங்களும் 1 ம் பிரதிவாதியின் கைவசம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கம்பெனி மேற்கோப்புகள் எனது சொந்தபணத்தில் கட்டப்பட்டதாக கணக்கு வழக்கு ஆவணங்கள் வேறு எழுத்து பூர்வமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது கைவசம் ஆவணங்கள் இருப்பதாக கூறுவது உண்மையல்ல என்றாலும், அவ்வாறு இருந்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் உள்ள கம்பெனியை உடைத்து அதில் உள்ள ஜாமான்களை எல்லாம் எடுத்து சென்றுவிட்டார். மேற்படி கம்பெனியை எப்போது உடைத்து பொருட்களை சென்று விட்டார் என்றால் 2020ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பொருட்களைகொண்டு சென்று விட்டார். அதற்கு நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். அதற்கான சி.எஸ்.ஆர் எனது கைவசம் உள்ளது. வழக்கு சொத்து மற்றும் அதில் உள்ள மேற்கோப்பையும் சேர்த்து தான் 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மேற்கோப்பை விற்றது செல்லாது என கோரி பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு மேற்கோப்பை விற்றது செல்லாது என கோரி தான் பரிகாரம் கேட்க சொன்னேன் அவ்வாறு போடவில்லை. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த 22.12.2008 கிரையம் செல்லாது என கோரி பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் ஸ்டுடியோவில் இருந்து ஆட்களை கூட்டி சென்று புகைப்படம் எடுத்தேன். மேற்படி ஸ்டுடியோவில் எந்தவித பில்களும் கொடுக்கவில்லை. வா.சா–ஆ.8 ஆவணம் ஸ்டுடியோவில் இருந்து ஆட்களை கூட்டி கொண்டு புகைப்படம் எடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு புகைப்படம் எடுத்திருந்தால் பில்களை வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–7 சொத்து வரி ரசீதுகள் நானும் எனது மனைவியும் ஒன்றாக வசித்து வந்தபோது போடப்பட்ட ரசீதுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் அடிமனை சொத்தை கிரையம் கொடுக்க வேண்டும் என்று 2019ம் ஆண்டு காலத்திலிருந்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தன் அடிமனையை வாங்க எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், அதை ஒப்புக்கொண்டால் எனது வழக்கிற்கு பாதாகமாகிவிடும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 அடமான பத்திரத்தையும் எனது மனைவியான 2ம் பிரதிவாதியால் தங்கம் என்பவருக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடமான ஆவணத்தின் பணத்தினை நான் தான் வாங்கினேன். நான் அடமான பணத்தினை செலுத்தி வந்தேன்.

மேற்படி அடமான கடனை நான் பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அடமான பெற்றவரை எனது தரப்பில் விசாரிக்க இயலும் என்றால் விசாரிக்க இயலும். எனது மனைவியை சாட்சியாக என்னால் விசாரிக்க இயலாது. வழக்கு சொத்தை சுற்றி மண் அடித்து 1ம் பிரதிவாதி நிரப்பியுள்ளார். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் தென்னை மரங்கள் போன்றவை வைத்துள்ளாரா என்றால் மண் அடித்து பிளாட் போடுவதற்காக வைத்துள்ளார். நான் வழக்கு சொத்தில் மரங்கள் எதுவும் நடவில்லை ஒரே ஒரு வேப்பமரம் வைத்தேன். தாவா சொத்தை நானும் எனது மனைவியும் சேர்ந்து தான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம்செய்துகொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா விற்பனைசெய்யும் போது புஞ்சை நிலமாக இருந்த காரணத்தினால் தாவா கட்டிடத்தை காண்பிக்க இயலாது என்ற காரணத்தினால் 1ம் பிரதிவாதியிடம் வழக்கு தாக்கல் செய்தால் பணம் பறிக்கும் நோக்கில் உங்கள் மனைவியுடன் சேர்ந்து கொண்டு வழக்கு தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எனது மனைவியும் தற்போது நல்ல உறவுமுறையில் ஒன்றாக வாழ்ந்து வருகிறேன் என்றாலும், நானும் எனது மனைவியும் ஒன்றாக வாழ்ந்து வருவதை ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு பாதாகமாகிவிடும் என்ற காரணத்தினால் மறைத்து பொய்யாக சாட்சிய்ம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற காலத்தில் இருந்து அவருடைய அனுபவத்தில்இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் இருந்து என்னுடைய அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் உங்களுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும்என்றால் சரியல்ல. வழகது பரிகாரங்கள் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

ம.வி இல்லை.